FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364125

1. District : கிருஷ்ணகிரி PS: சூளகிரி காவல் நிலையம் Year: 2026 FIR No.: 6/2026 Date: 09.07.2026
மாவட்டம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the P.C(Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(b)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 01.06.2026 Date to : 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 30.06.2026 நாள் வரை 10.00 hrs

Time Period : Time from : 08.07.2026 Time to : 13.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 09.07.2026 Time : 08.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 09.07.2026 Time : 09.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தோராய மத்தியில் அலுவலர் அலுவலகம் மேலாநத்தம் ஏரி, சூளகிரி பஸ்டாண்டிலிருந்து சுமார் 4.0 கி.மீ தென்கிழக்கு திசை, மாவட்டம்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கு. மாரிகாமன் (b) Father's/ Husband's Name : பா. கணேசன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 39/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயி (g) Address : 1/4, மாரியம்மன் கோவில் தெரு, மேலாநத்தம் ஏரி, சூளகிரி பஸ்டாண்டிலிருந்து, கிருஷ்ணகிரி மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

கு. கோபிநாதன், தோராய மத்தியில் அலுவலர், மேலாநத்தம் ஏரி, சூளகிரி பஸ்டாண்டிலிருந்து, கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 09.07.2026ம் தேதி காலை 08.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, சிவகங்கை மாவட்டம், மேலாங்கியம், கதவு எண். 1/4, மேலத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு.கணேசன் என்பவரின் மகன் திரு.ஊர்காவலன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வான புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தாலுகா, மேலாங்கியம் கிராம உதவியாளர் திரு.கணேசன் ஆகியோரை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவர்களின் நடத்தை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து, அன்னாரின் அனுமதி பெற்று 09.07.2026ம் தேதி காலை 09.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 6/2026 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018ன்படி வழக்கு பதிவு செய்தேன்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

ஊ. ஊர்காவலன்
9.7.2026

A. Kannan
Inspector
9/7/2026

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

09.07.2026 at 09.45 hrs.

15. Date & Time of despatch to the court.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A.KANNAN
Rank: நிலை Inspector of Police, No. எண்
V&AC, Sivaganga.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண். 6/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:

புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர்: G.ஊர்காவலன், த/பெ.பா.கணேசன், 1/4, மேலத்தெரு, மேலராங்கியம், சிவகங்கைமாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் சொந்த ஆட்டோ வைத்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எனது ஐயா லேட்.பாட்டையா பெயரில் இருந்த திருப்புவனம் தாலுகா, மேலராங்கியம் குரூப் சர்வே எண்.516/10-ல் உள்ள 0.02.35 ஏர்ஸ் மனையிடத்தில் 988 ச.அடி அளவுள்ள மனையிடத்துடன் கூடிய வீட்டினை எனது தகப்பனார் கணேசன், அண்ணன் ராமர், தம்பி பிரபு மற்றும் அக்கா ராமலெட்சுமி ஆகியோர் சேர்ந்து எனது பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் 04.06.2020ம் தேதி திருப்புவனம் பத்திர ஆபிஸில் பத்திர பதிவு செய்து கொடுத்தார்கள். அதன் பின்னர் மேற்படி பத்திரத்தில் வீட்டின் நான்கு மாலில் பிழை இருந்ததனால், அதனை சரிசெய்து 08.09.2020ம் தேதி சீர் திருத்த பத்திரம் பதிவு செய்தோம். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனது அனுபவத்தில் இருந்த வந்த வீட்டுடன் கூடிய மனையிடத்திற்கு எனது பெயருக்கு பட்டா வாங்குவதற்காக கடந்த 01.06.2026ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் மேலராங்கியம் விஏஒ அலுவலகத்திற்கு சென்ற போது, அங்கு தலையாரி திரு.கணேசன் என்பவர் மட்டும் இருந்தார். நான் அவரிடம் மேற்படி எனது வீட்டிற்கு பட்டா வாங்குவது சம்மந்தமாக கேட்ட போது, அவர் என்னிடம், "இவ்வளவு நாள் பட்டா வாங்காமல் என்ன செய்தாய்?, நானே உனக்கு அப்ளை பண்ணி, அதிகாரிகளிடம் பேசி பட்டா வாங்கி தருகிறேன், பணம் ரூ.3000/- செலவுக்கு கொடு எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்", என்று சொல்லி என்னிடமிருந்த பத்திரங்களின் நகல்கள், ஆதார் கார்டு நகல் ஆகியவற்றை வாங்கிக்கொண்டார். அதன் பின்னர் 1 மாதம் கழித்து, 30.06.2026ம் தேதி காலை 10.00 மணியளவில் எனது செல் நம்பர் 9585508408-லிருந்து தலையாரி கணேசனின் செல் நம்பர் 8940163906-க்கு call பண்ணி எனது மனையிடத்தின் பட்டா மாறுதல் சம்மந்தமாக கேட்டதற்கு அவர் என்னிடம், "பட்டா ரெடி ஆகிவிட்டது. நான் கேட்டபணம் ரூ.3000/-த்தை கொடுத்துவிட்டு Order copy-யை வாங்கிக்கொள்" என்று சொன்னார். நான் அவரிடம் நேரில் வந்து பார்ப்பதாக சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். பின்னர் 08.07.2026ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் மேலராங்கியம் VAO ஆபிஸிற்கு சென்றேன். அங்கு தலையாரி திரு.கணேசன் இல்லை. எனவே, மதியம் சுமார் 12.45 மணியளவில் அவருக்கு Call செய்தபோது, அவர் என்னிடம் திருப்புவனம் நரிக்குடி ரோடு, மணிமந்திர விநாயகர் கோவில் முக்கு அருகில் வந்து, பணம் ரூ.3000/-த்தை கொடுத்துவிட்டு பட்டா Transfer order copy-யை வாங்கிக்கொள்ளுமாறு கூறினார். நான் மதியம் சுமார் 1 மணியளவில் அவர் சொன்ன இடத்திற்கு சென்றேன். அப்போது, அவர் என்னிடம், "நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று கேட்டார். நான் அவரிடம், "தற்போது என்னிடம் பணம் இல்லை,

ரொம்ப டைட்டா இருக்கு, வண்டியும் ஒழுங்கா ஓடவில்லை, காசுக்கு தட்டுப்பாடா இருக்கு" என்று சொன்னேன். அதற்கு அவர், "இந்தா பட்டா copy-யை வைத்துக்கொள், லேமினேசன் போட்டுக்க, பணம் இல்லைனு சொல்லக்கூடாது, பணத்தை ரெடி பண்ணிட்டு நாளைக்கு வந்து கொடு, இல்லைனா அடுத்து வி.ஏ.ஓ ஆபிஸில உனக்கு எந்த வேலையும் நடக்காது" என்று கூறினார். நான் அவர் கொடுத்த பட்டா மாறுதல் உத்தரவு மற்றும் நத்தம் பட்டா ஆகியவற்றை வாங்கிக்கொண்டு, நாளை வந்து பார்ப்பதாக தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை. எங்களது பூர்விக சொத்தில் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனக்கு கிடைத்த எந்த வில்லங்கமும் இல்லாத மனையிடத்திற்கு பட்டா மாறுதல் செய்து கொடுத்ததற்கு லஞ்சமாக பணம் ரூ.3000/- கேட்ட மேலராங்கியம் தலையாரி திரு.கணேசன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் G.ஊர்காவலன். இணைப்பு: 1) எனது மனையிடத்தின் செட்டில்மெண்ட் பத்திர நகல், 2) சீர்திருத்த பத்திரத்தின் நகல், 3) பட்டா மாறுதல் உத்தரவின் நகல், 4) நத்தம் பட்டா நகல்.

Sir, Received the complaint on 09.07.2026 at 08.30 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated and obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime No. 6/2026 u/s 7(b) of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 09.07.2026 at 09.00 hrs and took up for investigation. Sd. A.Kannan, Inspr/V&AC, 09.07.2026.

இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் இணைப்பு ஆவணங்கள் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

A. Kannan
9/7/2026.
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Sivagangai.